**Starting time 12.14 P.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 221/2015**

Deposition of **P.W.4** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 10.09.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சண்முகம் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**1, 3** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை : என்னை நீதிமன்ற ஆணையராக நீதிமன்றம் நியமனம் செய்தபோது தாவா சொத்தையும், அதன் இயற்கை அமைப்பையும் பார்த்து அறிக்கை தாக்கல் செய்யும்படிதான் உத்தரவிடப்பட்டது என்றால், சரியல்ல, நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்யும் படி தான் உத்தரவிடப்பட்டது. எனக்கு வழங்கப்பட்ட வாரண்டில் தாவா சொத்தை மட்டும் தான் நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டு அளவீடு செய்யும் படி உத்தரவிடப்பட்டிருந்தது என்றால், சரிதான்.

2. தாவா முதலின சொத்தின் புல எண். 636/19, தாவா 2 ஆம் இன சொத்தின் புல எண். 636/18 என்றாலும், சரிதான். அவற்றை தான் அளவையரும் அளந்து பார்த்து வரைபடம் கொடுத்துள்ளார் என்றால், ஆமாம். அதனடிப்படையில் தான் நான் என்னுடைய அறிக்கையும் வரைபடத்தையும் தாக்கல் செய்தேன் என்றால், ஆமாம். அளவையர் தாவா சொத்திற்கு அருகில் உள்ள சொத்தையும் அளவீடு செய்தார்.

3. நான்கு புறத்தில் உள்ள சொத்துக்களையும் அளவீடு செய்துதான் தாவா சொத்தை அளந்து காண்பித்தாரா என்றால், ஆமாம். என்னுடைய அறிக்கையில் அளவையர் எந்த கல்லிலிருந்து எந்த கல் வரையிலும் அளந்து காண்பித்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால்,

இல்லை. தாவா சொத்திற்கு மேற்குபுறத்தில் அதாவது 1-ஆம் பிரதிவாதியின் சொத்திற்கு மேற்குபுறத்தில் உள்ள தென்வடல் சந்தையும் அளந்து பார்க்கும்படி எனக்கு உத்தரவில்லை என்றால், ஆமாம். எனக்கு அவ்வாறு உத்தரவில்லை. பூமியில் இருந்ததால் நான் குறிப்பிட்டுள்ளேன். நில அளவையரும் அவருடைய வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

4. நில அளவையர் அந்த சந்தை தனிப்பட்ட முறையில் அளந்து எனக்கு அத்து காண்பித்தாரா என்றால், காண்பித்தார். இரு தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் தான் அளந்து காண்பித்தார். ஆனால் அது தாவா சொத்து அல்ல என்றால், ஆமாம். தாவா 1-வது இன சொத்தின் தென்புறத்தில் 2 ½ மீ அகலத்தில் ஒரு சந்து இருப்பதாக அளவையர் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம்.

5. எனது வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை. ஏனென்றால், குப்புசாமி ரெட்டியார் அந்த சந்தை அடைத்து வீடாக கட்டியுள்ளார். அதுபற்றி எனது அறிக்கையிலோ, வரைபடத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால், ஆக்கிரமித்து கட்டியதாக கூறவில்லை, ஆனால் எனது வரைபடத்தில் சந்தாக காண்பிக்காமல் வீடாக காண்பித்துள்ளேன். குப்புசாமி ரெட்டியாரின் வீட்டிற்கு மேற்குபக்கத்தில் தாவா 2-வது இன சொத்திலிருந்து வாசற்படி செல்வதாகத்தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால், ஆமாம்.

6. குப்புசாமி வீட்டிற்கு தென்புறத்தில் 3-ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா 2-வது இன சொத்திலிருந்து செல்வதாகத்தான் காண்பித்துள்ளேன் என்றால், அவ்வாறு நான் காண்பிக்கவில்லை. தாவா 2-வது இன சொத்திற்கு கிழபுறத்தில் 3-ஆம் பிரதிவாதியின் காலிமனையும், அதற்கடுத்ததாக வீடும் இருப்பதாக தான் காண்பித்துள்ளேன். என்னுடைய வரைபடத்தில் 3-ஆம் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்குபுறம் பார்த்தவாறு தான் வாசற்படி இருப்பதாக காட்டியுள்ளேன் என்றால், ஆமாம்.

7. 3-ஆம் பிரதிவாதியும் குப்புசாமி ரெட்டியாரும் தங்களது சொத்துக்களுக்கு தாவா 2-வது இன சொத்தை வழிபாதையாக பயன்படுத்திதான் வர முடியும் என்றால், இந்த பாதை வழியாகவும் செல்லலாம். என்னுடைய அறிக்கையிலும், வரைபடத்திலும் மேற்படி சொத்துக்களுக்கு எந்த வழியாக பாதை பயன்படுத்தலாம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், ஆமாம். ஆனால் தாவா 1-வது இன சொத்திற்கு தாவா 2-வது இன சொத்து மட்டும்

தான் பாதை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால், ஆமாம்.

8. தாவா 2-வது இன சொத்திற்கு மேற்குபுறத்தில் 1-ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து இருப்பதாக காண்பித்துள்ளேன் என்றால், ஆமாம். அதற்கு வாசற்படி தென்புறத்திலும், வடபுறத்திலும் இருப்பதாக காட்டியுள்ளேன் என்றால், ஆமாம். அந்த வீட்டிற்கு வடபுறத்தில் அவருக்கு காலிமனை இருப்பதாகவும் காட்டியுள்ளேன் என்றால், ஆமாம். 1-ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு தாவா 2-ஆம் இன சொத்தை பாதையாக பயன்படுத்தலாம் என்றால், 1-ஆம் பிரதிவாதி வீட்டிற்கு ரோட்டிலிருந்தே வந்துவிடலாம். காலிமனைக்கு தான் 2-ஆம் இன சொத்து வழியாக வர முடியும்.

9. காலிமனையிலிருந்து அதன் தென்புறத்தில் உள்ள 1-ஆம் பிரதிவாதியின் வீட்டிற்கு செல்லலாம் என்றால், ஆமாம். தாவா 2-வது இன சொத்திற்கு மேற்குபுறத்தில் 1-ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால், ஆமாம். 1-ஆம் பிரதிவாதியும் 2-ஆம் இன சொத்தின் வழியாகத்தான் தனது காலிமனைக்கு வழியாக பயன்படுத்தி வருகிறார் என்று எனது அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், ஆமாம். 1-ஆம் பிரதிவாதி அதுதான் தடம் என்று என்னிடம் சொல்லவில்லை.

10. மேற்சொன்ன விவரத்தை நான் என்னுடைய அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லவில்லை. வாதி இந்த பாதையை தவிர வேறு பாதை இல்லை என்று என்னிடம் சொன்னார்களா என்றால், வாதியும், அவரது வழக்கறிஞரும், அருகில் இருந்தவர்களும் கூறினார்கள். மேற்படி விவரத்தை எனது அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. தாவா 2-வது இன சொத்தானது அரசு ஆவணப்படி அரசுக்கு சொந்தமானது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. அது காலியிடமாகத்தான் உள்ளது.

11. தாவா 2-வது இன சொத்தில் அமைந்துள்ள வண்டிப்பாதையை அதன் இருபுறத்தில் உள்ளவர்கள் அனுபவித்து வருவதை யாரும் தடை செய்ய இயலாது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. வாதியும் அவரது வழக்கறிஞரும் கேட்டுக் கொண்டதற்காக தாவா 1-வது இன சொத்திற்கு தென்புறத்தில் உள்ள சந்தை ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக நான் பொய்யாக வாதிக்கு ஆதரவாக அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

12. வாதிக்கு மாற்றுப்பாதை இருக்கிறதா என்பது குறித்து பார்வையிட்டு அறிக்கை தாக்கல்

செய்ய எனக்கு உத்தரவு எதுவும் இல்லை என்றால், ஆமாம். ஆனால் வாதிக்கு வீட்டிற்கு கிழபுறம், வடபுறம், மேற்குபுறம் வீடுகள் இருப்பதால் அவருக்கு வேறு பாதை இல்லை. அதேபோல் 2-வது இன சொத்திற்கும் அருகிலிருப்பவர்களுக்கு வேறு பாதை இருக்கிறதா என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், ஆமாம். தாவா 2-வது இன சொத்தில் உள்ள பாதையை இருபுறத்திலும் இருப்பவர்கள் அந்த பாதையைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும், நான் வாதி கேட்டுக்கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

**13.** வாதி தரப்பு மறு விசாரணை எனக்கு நீதிமன்றத்திலிருந்து கொடுக்கப்பட்ட வாரண்டில் பூமியில் அமைப்பு எவ்வாறு இருக்கிறது என்பது பற்றி அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டிருந்தது என்றால், ஆமாம். மாற்றுப்பாதை இருப்பதாக என்னுடைய பார்வையின் போது உடனிருந்த பிரதிவாதிகளோ, அவர்களது வழக்கறிஞர்களோ என்னை அழைத்து சென்று காட்டினார்களா என்றால், சொல்லவும் இல்லை, காட்டவும் இல்லை. அவ்வாறான மாற்றுப்பாதை இருந்திருந்தால் அதை கூட்டிச் சென்று காண்பித்திருப்பார்கள், அவ்வாறு இல்லாததால் தான் அழைத்து சென்று காட்டவில்லை என்றால், சரிதான். நான் பார்த்தவரையில் மாற்று பாதை இல்லை.

**14.** **1, 3** பிரதிவாதிகள் தரப்பு மறு குறுக்கு விசாரணை : தாவா 1-வது இன சொத்திற்கு தென்புறத்தில் 2 மீ அகல சந்து இருப்பதாக பிரதிவாதி தரப்பில் என்னிடம் காட்டினார்களா என்றால், இல்லை. அதுபற்றி என்னிடம் சொல்லவும் இல்லை. Ex.C3-ன் அளவையர் கொடுத்துள்ள வரைபடம் சரியானது தான் என்றால், ஆமாம். தாவா 1-வது இன சொத்திற்கு தென்புறத்தில் 2 மீ சந்து இருப்பதாக அளவையர் காட்டியுள்ளார் என்றால், ஆமாம். அந்த சந்தினுடைய கிழபுறத்தில் அடைக்கப்பட்டிருப்பதாக தான் காண்பித்துள்ளார். எதில் அடைத்ததாக காட்டியுள்ளார் என்றால், கோடு போட்டு அடைத்து காட்டியுள்ளார்.

15. அதேபோல தாவா 1 மற்றும் 2 இன சொத்திற்கு தென்புறத்திலும் கோடு போட்டு அடைத்து தான் காண்பித்துள்ளார் என்றால், அதை 4 பக்க எல்லையை நிர்ணயித்து

சொல்லியுள்ளார். அதேபோல தாவா 2-வது இன சொத்திற்கு தென்புறத்தில் 4 பக்க எல்லை நிர்ணயித்துதான் கோடு போட்டு காட்டியுள்ளார் என்றால், அவ்வாறு என்னிடம் காட்டவில்லை. அளவையர் தாவா 2-வது இன சொத்திற்கு தென்புறத்தில் கிழமேலாக செல்லும் 6 அடி சந்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக என்னிடம் எதுவும் அறிக்கை கொடுக்கவில்லை என்றாலும், நானும் கேட்டு வாங்கவில்லை என்றாலும், ஆமாம். பூமியில் சந்து இல்லாததால் நான் கேட்டு வாங்கவில்லை. அளவையர் வரைபடத்திற்கு முரணாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 12.49 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.